அன்று விரிவான விவாதத்திற்கு அது எடுத்துக்கொள்ளப்பட்டு, விவாதத்தினுடைய இறுதியிலே விளக்கமான விவரங்களையெல்லாம் நான் அதிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். ஒருவேளை அந்த விளக்கத்தை அறியாமல், புரியாமல் மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் இங்கே பேசியிருக்கலாம். எதை எப்படிப் பேசியிருந்தாலும் அவர் பேசுகிறபோது ** என்ற ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டிருக்கிறார். ஆதாரம் இருந்தால் அதை ஏற்றுக்கொண்டு அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. எனவே, ஆதாரம் இல்லாமல் அவர் பேசியிருக்கிற காரணத்தால் தயவுகூர்ந்து அந்த வார்த்தையை அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவி. சண்முகம் அவர்கள் பேசும்போது சொன்ன அந்த வார்தைகள் துணை முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) எங்கே இருக்கிறது? கொண்டு வாருங்கள். ஆதாரம் இல்லாமல் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) ஆதாரம் இருந்தால் கொண்டுவந்து கொடுங்கள். சும்மா வாயில் வந்ததோ அல்லது புளி புளித்ததோ என்று பேசக்கூடாது. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்)

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்று சொல்கிறீர்கள் இல்லையா? அதற்கு ஆதாரத்தைக் கொடுங்கள். ஆதாரம் இல்லாமல் பேசாதீர்கள். நான் அப்போதே சொல்லியிருக்கிறேன் உங்களிடத்தில். அவைக்குறிப்பிலிருந்து அவர் சொன்ன அந்த வார்த்தை நீக்கப்படுகிறது. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அவையில் முன்னாள் அமைச்சராக இருந்த, மறைந்துவிட்ட குழந்தைவேலு அவர்கள், இப்படித்தான் என்னிடத்திலே ஆதாரம் இருக்கிறது என்று, என்மீது ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.